# திராவிடப் போராளிகள் 19

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## புரட்சிக் கவிஞரின் மராட்டிய சகோதரி!

## வை.சு.மஞ்சுளாபாய்

ஓவியம் : ரவிபேலட்



*1930-களின் முடிவில், தந்தை பெரியார் அவர்கள், தான் பங்கேற்கும் சுயமரியாதை இயக்கப் பொதுக்கூட்டங்களில் ஒரு இளம்பெண்ணை அழைத்து '**பாரதிதாசன் பாடலைப் பாடு**' என்று கூறுகிறார். அந்த இளம்பெண் பாடுகிறார்.*

***“கூண்டிற் கிளி வளர்ப்பார்- இல்லத்தில்***
***குக்கல் வளர்த்திடுவார்,***
***வேண்டியது தருவார்-அவரின்***
***விருப்பத்தையறிந்தே!***
***மாண்டவன் மாண்டபின்னர்-அவனின்***
***மனைவியின் உளத்தை***
***ஆண்டையர் காண்பதில்லை- ஐயகோ***
***அடிமைப் பெண்கதியே!***

புரட்சிக்கவிஞர் கவிதைகளின் முதல் தொகுதியில் '**கைம்மைக் கொடுமை**' என்ற தலைப்பில், 'கண்கள் நமக்குண்டு' என்று தொடங்கும் அந்தப் பாடலைக் கேட்டால், கேட்போர் மனம் உருகும். சில பொதுக்கூட்டங்களில் பேசுவார்: அது கேட்போருக்கு அறிவுத் தெளிவை ஏற்படுத்தும். அனைத்திற்கும் மேலாக அந்தப் பெண் மராட்டியை தாய்மொழியாகக் கொண்டவர் என்ற உண்மையை அறியும் எவருக்கும் வியப்பே ஏற்படும்.

அந்த இளம்பெண்ணின் பெயர் **மஞ்சுளாபாய்.** சுயமரியாதை இயக்கம் அள்ளிக் கொடுத்த அருமணிகள் நிறைந்து கிடக்கும் திராவிட இயக்கத்தின் வரலாற்றில், நாம் அறிந்துகொள்ள வேண்டிய மற்றொரு மாமணி வை.சு.மஞ்சுளாபாய் அவர்கள்.

### இளமையில் விதவைக் கோலம்!

அவரது தந்தை, தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னரின் அரண்மனையில், மெய்க்காவலர்களின் தலைவராக இருந்தவர். அந்தப் பதவிக்கு ஆங்கிலத்தில் 'DIGNITY INSPECTOR' என்று பெயர். வசதிக்குக் குறைவில்லாத குடும்பம். வைதீக மூடத்தனத்திலும் பெண்ணடிமையிலும் மூழ்கிய சமூகம். தமிழ்ப் பாடமும் கவிதைகளும் கற்பதில் மராட்டி மொழிபேசும் மஞ்சுளாபாய்க்குத் தீராத ஆர்வமும் ஈடுபாடும் இருந்தன. இனிமையான குரலைக் கொண்ட மஞ்சுளாபாய்க்கு இசையும் கற்றுக்கொடுக்கப்பட்டது.

எத்தனை கற்றும் என்ன பயன்? திருமணம் அல்லவா ஒரு பெண்ணின் வாழ்வைத் தீர்மானிப்பது? ஏழு வயதுச் சிறுமியான மஞ்சுளாபாய்க்குப் பாரம்பரியம் என்ற சனாதனப் போர்வையில் திருமணம் செய்து வைக்கப்பட்டது. விளையாட்டுப் பருவத்தில் வீட்டுச் சுமையை ஏற்றிய சமூகக் கொடுமையை அந்தப் பிஞ்சு மனம் வெறுத்தது .

சில ஆண்டுகள் கழிந்தபின் குடும்ப வாழ்க்கை பற்றி அறியத் தொடங்கிய காலத்தில், 1936-ஆம் ஆண்டில் மஞ்சுளாபாயின் கணவர் இறந்துவிட்டார். இழப்பின் வலியை உணரும் முன்பே, அவர் விரும்பாமலே, '**விதவைக் கோலம்**' மஞ்சுளாபாய் மீது திணிக்கப்பட்டது.

### பெரியார் தந்த வெளிச்சம்!

இசையறிவும், தமிழ் உணர்வும், பகுத்தறிவுச் சிந்தனையும் கொண்ட மஞ்சுளாபாய் விதவைக் கோலத்தை எதிர்த்தார். பழமை மூடப்பழக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார். பெண் ஏன் மறுமணம் செய்யக்கூடாது? என்று கேள்வி எழுப்பினார். அவரது உரிமைக் குரலுக்கு, அடக்குமுறையே பரிசாகக் கிடைத்தது. அந்த நேரத்தில்தான் தந்தை பெரியார் தொடங்கிய '**சுயமரியாதை இயக்கம்**' நாடெங்கும் கிளைபரப்பி வளர்ந்து வந்தது. அதன் வெளிச்சம் அவருக்கு வாழ்வின் திசையைக் காட்டும் கலங்கரை விளக்கமாகக் கிடைத்தது.

சுயமரியாதை எனும் ஒளிக் கீற்றைப் பிடித்துக்கொண்டே விடியலை நோக்கி நடந்தார் மஞ்சுளாபாய். சுயமரியாதை இயக்கத்தை நாடி, வந்தோரை எல்லாம் தன் சொந்தப் பிள்ளைகளாகவே கருதி, பாதுகாத்த அன்னை நாகம்மையாரே மஞ்சுளாபாயின் காப்பாளர் ஆனார்.

### புகலிடம் தந்த நாகம்மாள் காலனி

தந்தை பெரியாரின் கொள்கைகளும் புரட்சிக் கவிஞரின் கவிதைகளும் நாகம்மையாரின் அன்பும்தான் மஞ்சுளாபாய் எனும் தீரம் மிக்கப் போராளியை உருவாக்கின.

கவிஞர் முருகுசுந்தரம் அவர்கள் தொகுத்த '**குயில் கூவிக் கொண்டிருக்கும்**' என்ற நூலில், தன்வாழ்க்கையைப் பற்றி மஞ்சுளாபாய் அவர்கள் இப்படி எழுதினார்.

“1936- ஆம் ஆண்டு, இளமையில் கணவனை இழந்து, சமுதாயக் கொடுமை என்னும் சூறாவளியில் சிக்கி, பாய்மரம் உடைந்த மரக்கலம் போல் வாழ்க்கை அலைமலையில் திக்குத் தெரியாமல் மிதந்து கொண்டிருந்த என்னை 'சுயமரியாதைத் தென்றல்', ஈரோடு நாகம்மாள் காலனித் துறைமுகத்தில், கொண்டு வந்து சேர்த்தது.

சமுதாயக் கொடுமைகளால் நைந்து போயிருந்த எனக்கு, சுயமரியாதை இயக்கம் ஏற்ற புகலிடமாய் அமைந்தது. ஒரு பெண் தன்மதிப்போடும், பாதுகாப்போடும் வாழ நாகம்மாள் காலனியை விட ஏற்ற இடம் வேறு எதுவும் இல்லை என்பதை உணர்ந்தேன்”. (இதனை அவர் எழுதியது 1981-ஆம் ஆண்டில் என்பதையும் குறித்துக் கொள்ள வேண்டும்.)

> **‘சீர்திருத்தச்செம்மல்’ என்று பாராட்டப்பெற்ற வை.சு.சண்முகனார் தன் பெயருக்குப் பின் சாதிப்பட்டத்தை சேர்க்காமல் கையெழுத்திட்டவர் என்ற பெருமையும் பெற்றவர்.**

தனது எண்ணங்களை இத்தனை வலிமையாக எழுத்தில் வடிக்கும் ஆற்றல் கொண்ட மஞ்சுளாபாய் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார். பொதுவாழ்க்கையும் சுயமரியாதை இயக்கமும் அவரது ஆளுமையை மேலும் பொலிவு பெறச் செய்தன. யாருடைய பாடல்களை மனமுருகிப் பாடிவந்தாரோ அந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் அறிமுகமும் அவருக்குக் கிடைத்தது. அதைப்போலவே அவரது வாழ்வின் திருப்பு முனையாக **கானாடுகாத்தான் வை.சு.சண்முகனாரின்** அறிமுகமும் ஏற்பட்டது.

### சீர்திருத்தக் கருத்துகளைப் பேசிய மாளிகை

தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கப் பிரச்சாரத்திற்காகத் தென் தமிழ்நாட்டின் பகுதிகளுக்குச் செல்லும்போது அவர் தங்கும் இடம் புகழ்பெற்ற தனவணிகரான கானாடுகாத்தான் வை.சு.சண்முகம் அவர்களது மாளிகை. அரண்மனை போன்ற அந்த இல்லத்திற்கு '**இன்ப மாளிகை**' என்று பெயர். சீர்திருத்தக் கருத்துகளைச் சொல்லில் மட்டுமன்றி செயலிலும் சாதித்துக் காட்டியவர்.

சுயமரியாதை இயக்கத்தின் பொருளாளர். அதற்கும் முன்பே காங்கிரஸ் இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவர். சேரன்மாதேவி குருகுலத்தில் வ.வே.சு.ஐயர் மாணவர்களிடையே உணவு வழங்குவதில் பின்பற்றிய சாதி வேறுபாட்டை, தந்தை பெரியாருடன் சேர்ந்து எதிர்த்தவர். 'சேரன்மாதேவி குருகுலத்தை நானே ஏற்று நடத்துகிறேன்' என்று அறிவித்தவர். கவிஞர் பாரதியாரின் புரவலராக இருந்தவர். அவருக்கு வீட்டுச் செலவுகளுக்காக மாதா மாதம் ரூபாய் 40 அனுப்பி வைத்தவர். சண்முகனாரின் வீட்டிற்கு காந்தியார் பலமுறை சென்றுள்ளார்.

வை.சு.சண்முகம் அவர்கள், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களது கவிதைகளில் உள்ளம் தோய்ந்தவர். அதுமட்டுமல்ல,

'**பெண்ணோடு ஆண் நிகர்**' என்ற அவரது ஆத்திசூடியை நடைமுறைப்படுத்தியவர். அவரது மனைவியின் பெயர் லட்சுமி. தன் மகன் பெயருக்கு தன் பெயரின் முதலெழுத்தையும், தன் மகள் பெயருக்கு தன் மனைவியான லெட்சுமியின் பெயரின் முதலெழுத்தையும் முன்னெழுத்தாக வைத்தவர். அவரது மனைவி லெட்சுமி அவர்கள் உடல்நலம் குன்றி இறந்தபோது செட்டிநாட்டினர் செய்யும் எந்தச் சடங்கையும் பின்பற்றாமல் பெட்டியில் வைத்து மலர்களால் அலங்கரித்து ஊர்வலமாக எடுத்துச்சென்று அடக்கம் செய்தவர். சமபந்தி விருந்தும் வைத்தவர்.

அவர் மனைவி இறக்கும் தருவாயில் சண்முகனார் வெளிநாட்டிலிருந்ததால் தான் வந்து சேரும் முன் தன் மனைவி இறந்துவிட்டால், அவரை இப்படித்தான் அடக்கம் செய்ய வேண்டும் என்று காரைக்குடி இராம சுப்பையா அவர்களுக்கும் மற்றும் சிலருக்கும் அவர் கடிதம் எழுதி முன்னேற்பாடுகளைச் செய்து வைத்தது அப்பகுதி மக்களுக்கு பேரதிர்ச்சியாக இருந்ததாம்.


இத்தகைய செயல்களால் '**சீர்திருத்தச்செம்மல்**' என்று பாராட்டப்பெற்ற வை.சு.சண்முகனார் தன் பெயருக்குப் பின் சாதிப்பட்டத்தை சேர்க்காமல் கையெழுத்திட்டவர் என்ற பெருமையும் பெற்றவர்.

இந்த வை.சு.சண்முகனாரும் மஞ்சுளாபாய் அம்மையாரும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தார்கள். அன்றைய காலகட்டத்தில் ஆண் மறுமணம் செய்வதில் தடையொன்றுமில்லை. ஆனால், விதவைப் பெண்ணுக்கு மறுமணம் என்றால், ஊரார் எதிர்ப்புக்குக் கேட்கவா வேண்டும்?

(வருவார்கள்...)

---

## கற்றல் 2.0!




'கற்றல் 2.0' என்ற ஃபேஸ்புக் தளம். 'தமிழ் கற்றல்', 'நூல் அறிமுகம்', 'திராவிட இயக்க வரலாறு' ஆகியவற்றைப் கவனிக்கத்தக்க வகையில் பேசுகிறது.

'பேச்சுக்கலை' குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் கூறியவற்றைக் காலத்துக்கு ஏற்ப மீண்டும் பதிவிடுவது, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்வுகளை விளக்குவது என கற்றல் 2.0 பக்கம், திராவிடச் சிந்தனையில் இளைஞர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் உள்ளது.

சமூக வரலாறு, சமூக நீதிக் கருத்துகள், திராவிடச் சிந்தனைகளை வீச்சாகக் கொண்டு செல்வது காலத்தின் தேவையாக உள்ளது. அடையாளம் காட்டுவதன் மூலம் அந்த ஆற்றல் மேம்பட வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### 'மிசா'வுக்கு நிதி!

அவசர நிலைச் சட்டத்தைக் காரணம் காட்டி, கழக ஆட்சி கலைக்கப்பட்டிருந்தது. கைதாகியிருந்த கழகத் தோழர்களுக்கு உதவ, தலைவர் கலைஞரும் பொருளாளர் சாதிக் பாட்சா அவர்களும் மிசா வழக்கு நிதி வசூல் செய்வதற்காக, திருநெல்வேலி மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தனர். அப்போது, நான் 25 வயது இளைஞனாக தலைவரிடம் நிதியை வழங்கிய போது எடுக்கப்பட்ட புகைப்படம், இன்றும் திராவிட இயக்கக் கொள்கை உணர்வுடன் பயணிக்கும் எனக்கு இப்புகைப்படம் ஓர் உந்துசக்தி என்றால் அது மிகையில்லை.



வைரமணி

**-ப.வைரமணி, முன்னாள் வட்ட செயலாளர், திருநெல்வேலி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### இதழ் பெயரில் கோரிக்கை!

**1942-ஆம் ஆண்டில் இந்தியா வந்த கிரிப்ஸ் தூதுக் குழுவைச் சந்தித்து, திராவிட நாட்டை தனி நாடாக அங்கீகரிக்கும்படி கோரிக்கை வைத்தார் தந்தை பெரியார். அந்தச் சந்திப்பின்போது அண்ணா உடன் இருந்தார். ஆனால், அந்தக் கோரிக்கையை சர் ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. இதையடுத்து, 'திராவிட நாடு' கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லை. ஆனால், 'திராவிட நாடு' என்ற லட்சியத்தை அண்ணா அத்துடன் கைவிடவில்லை. தன்னுடைய பத்திரிகைக்கு 'திராவிட நாடு' என்று பெயர் வைத்து கோரிக்கையை மக்களிடம் கொண்டு சென்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 127




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131